# மெட்ரோ நிலையத்துக்கு வெளியிலும் 'டிராவல் கார்டு' விற்பனைக்கு ஏற்பாடு

– நமது நிருபர் –

மெட்ரோ ரயிலில் பயணியர் வருகையை அதிகரிக்க, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில், 'டிராவல் கார்டு' விற்பனை செய்யப்படுகிறது.

சென்னை விமான நிலையம் – விம்கோ நகர்; பரங்கிமலை – எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் நிலையம் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இதில் தினமும், லட்சக்கணக்கானோர் பயணிக்கின்றனர். மெட்ரோ ரயிலில், பயணியர் வருகையை அதிகாரிக்க, 'டிராவல் கார்டு' மற்றும் 'மொபைல் ஆப்' வாயிலாக, 'கியூ ஆர்' குறியீடு பயன்படுத்தி பயணம் செய்பவர்களுக்கு, 20 சதவீத கட்டண சலுகை வழங்கப்படுகிறது.



சின்னமலை மெட்ரோ ரயில் ஊழியர், பொது மக்களிடம், 'டிராவல் கார்டு' விற்பனை செய்தார்.

தவிர, ஞாயிறு மற்றும், அரசு விடுமுறை நாட்களில், 50 சதவீதம் கட்டண சலுகையும் வழங்கப்படுகிறது. பயணியர் வருகையை மேலும் அதிகரிக்க, மெட்ரோ நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, மெட்ரோ ரயிலில் பயணிக்க பயன்படுத்தப்படும், டிராவல் கார்டு விற்பனையை, நிலையத்திற்கு வெளியேயும் செயல்படுத்த நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

மெட்ரோ ஊழியர்கள், நிலையங்களில் வெளியே சென்று, மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும், பள்ளி, கல்லுாரி மற்றும் அலுவலக வளாகங்களிலும், கார்டு விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டு, அந்த திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன் அடிப்படையில், காலை, 4 மணி நேரம் மற்றும் மாலை, 4 மணி நேரம், மெட்ரோ ஊழியர்கள் இப்பணியில், ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.